செ.வெ.எண்: 685 /2016 நாள்: 30.09.2016

**கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் அரசியல் கட்சிகளுக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணைகளின்படி பொது இடங்கள், அரசு கட்டிடங்கள் மற்றும் சுவர்களில் அரசியல் விளம்பரங்களை நீக்குதல் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவரின் நாளிதழ் செய்திக்குறிப்பு**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட நீதிப்பேராணை மற்றும் அவமதிப்பு வழக்குகளில் 19.07.2016 அன்று நாளிட்ட தீர்ப்பின் படியும் சாதாரண உள்ளாட்சித்தேர்தல் 2016 சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதினாலும் பொது இடங்கள்,அரசு கட்டிடங்கள் பொதுச்சுவர்கள் மற்றும் தொடர்புடைய அனைத்து இடங்களிலிருந்தும் அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்ட சுவரொட்டிகள் மற்றும் விளம்பரங்களை அகற்றுவது தொடர்பாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து பதிவுபெற்ற அரசியல் கட்சிகளும் நகராட்சி, பேருராட்சி, மற்றும் கிராம ஊராட்சிகளுக்குட்பட்ட பொது இடங்கள்,அரசு கட்டிடங்கள் பொதுச்சுவர்கள் மற்றும் தொடர்புடைய அனைத்து இடங்களிலிருந்தும் அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்ட சுவரொட்டிகள் மற்றும் விளம்பரங்களை நீதிமன்ற ஆணைகள் வெளியிடப்பட்ட ஒரு மாத காலத்திற்க்குள் அகற்றுவது தவறும்பட்சத்தில் Tamil Nadu Open Places (Prevention of Disfigurement) Act 1959ன் படி சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் மீது நடவடிக்கைகள் தொடரவும் மாநில அரசினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே,கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் பதிவு பெற்ற அனைத்து அரசியல் கட்சிகள் பொருள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளவும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணைகளை முழுமையாக பின்பற்றவும் இதன்முலம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நகராட்சி, பேருராட்சி, மற்றும் கிராம ஊராட்சிகளுக்குட்பட்ட பொது இடங்கள், அரசு கட்டிடங்கள், பொதுச்சுவர்கள் மற்றும் தொடர்புடைய அனைத்து இடங்களிலிருந்தும் சுவரொட்டிகள் மற்றும் விளம்பரங்களை அகற்றிட முழு மனதுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கேட்டுக்கொள்கிறேன்.

**ஒப்பம் /-**

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**கன்னியாகுமரி மாவட்டம்.**

**உண்மை நகல் உத்தரவுப்படி**

மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளர் (தேர்தல்),
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.